**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| Deposition of Name | ராஜா | Prosecution | PW–4 Cross |
|---|---|---|---|
| Father Name | கோவிந்தராஜ் | Defence | |
| Village | கீழவெளி, | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 62/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>22.09.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. <u>எதிரிகள் ஆஜர்</u>**

**மனுவின் பேரில் அழைகப்பட்டு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எப்போது விசாரித்தாரகள் என்றால் சம்பவம் நடந்து சுமார் 15 அல்லது 20 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். எங்கள் குடும்பத்திற்கும் அய்யப்பன் குடும்பத்திற்கும் சண்டை நடந்ததாக நான் வேலைக்கு சென்று வந்த போது கேள்வி பட்டேன் என்றால் சரிதான். என் மனைவியும், என் மகன் வினோத்குமாரும் சேர்ந்து பொய்புகார் கொடுத்துள்ளார்கள் என்றாலும் அதற்கு நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கல்பனா | Prosecution | PW-3 Cross |
| Father Name | க/பெ. வினோத்குமார் | Defence | |
| Village | கீழவெளி, | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 26/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>22.09.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. <u>எதிரிகள் ஆஜர்</u>**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

**1.** எனக்கும் வினோத் குமாருக்கும் திருமணம் ஆகி 10 வருடம் ஆகிறது என்றால் சரிதான். கடந்த 10 வருடங்களாகவே எங்கள் குடும்பத்திற்கும் அய்யப்பன் குடும்பத்திற்கும் இடம் தொடர்பாக பிரச்சனை உள்ளது என்றால்சரிதான். ஏற்கனவே எங்கள் குடும்பத்தினர் அய்யப்பனை தாக்கியதாக வழக்குகள் நிலுவை யில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்த போது சண்டையை யார் யார் விலக்கினார்கள் என்றால் கலியமூர்த்தி, சசிக்குமார், முருகவேல், செல்வக்குமார், சேகர் ஆகியோர் விலக்கிவிட்டனர். என் கணவரை அய்யப்பன், கலியன்,மாலதி ஆகிய மூவரும் கட்டையால் அடித்ததாக புகார் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான்.

2. என் கணவரை கட்டையால் அடித்ததில் முன் கை, வலது கை தோல்பட்டை, கைவிரலிலும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் எங்கள் மூன்று பேருக்கும் காயம் ஏற்பட்டது. அதற்கு சீர்காழீ GH யில் சிகிச்சை பெற்றோம் என்றால் சரிதான். என் மாமியாருக்கு வலது காலில் காயமும், தலையில் சுவற்றில் மோதியதில் தலையிலும் இரத்த காயமும் ஏற்பட்டது என்றால் சரிதான். என்னை பிடித்து கீழே தள்ளியதில் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த 2 நாட்கள் கழித்து சீர்காழிGhயில் போலிசார் விசாரித்தார்கள். என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும், அய்யப்பன் குடும்பம் மேல் உள்ள முன்பகை காரணமாக மாமியார் கொடுத்த பொய்யான

புகாருக்கு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அய்யப்பன் ஆட்டோ ஓட்டும் தொழீல் செய்து வருகிறார் என்றால் சரிதான். அய்யப்பனும் அவரது தந்தையும் யார் வம்புக்கும் போக மாட்டார்கள் என்றாலும் அவர்கள் அப்பாவிகள் என்றாலும் அவர்களுக்கு எதிராக பொய்வழக்கு போட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | வினோத்குமார் | Prosecution | PW-2 Cross |
| Father Name | ராஜா | Defence | |
| Village | கீழவெளி, | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 30/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **22.09.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

1. நான் கீழவெளி தெற்கு தெருவில் வசிக்கிறேன் என்றால் சரிதான். அய்யப்பன் வகையறாவும் அதே தெருவில் வசிக்கிறார் என்றால் சரிதான். என் வீட்டிற்கு கிழக்கு புறம் அய்யப்பன் வீடு என்றால் சரிதான். அய்யப்பன் வீடு கிழக்கு பக்கம் விஜய பாலன் வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு மேற்குபக்கம் முருகவேல் வீடும் அதற்கு அடுத்து செல்வக்குமார் வீடும் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு எதிர்புறத்தில் சேகர், கலியமூர்த்தி, சரசு, குருசாமி ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவில் சுமார் 15 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான்.

2. எங்கள் குடும்பத்திற்கம் அய்யப்பன் குடும்பத்திற்கும் 10 ஆண்டுகளுக்கம் மேலாக இடப்பிரச்சனை தொடர்பாக தகறாறு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே 2016 ல் அய்யப்பனை நானும், என் அப்பா, கல்பனா, ராஜா ஆகியோர் தாக்கி அய்யப்பனுக்கு கை எலும்பு முறிந்துவிட்டதாக வழக்க பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு முடிந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் என் குடும்பத்தாரும் பிணையில் வெளியே வந்தோம் என்றால் சரிதான். 08.05.2022 ல் நான், மைத்துனர் முத்துக்குமார், ராஜா, கல்பனா, வளர்மதி ஆகியோர் அய்யப்பனை தாக்கி அவரின் கால் எலும்பு முறித்தாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் நாங்கள் அனைவரும் பிணையில் வெளியே வந்தோம் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் அரசு மருத்துவ மனையில் என்னை விசாரித்தார்கள். சீர்காழி GHயில் தாயார் வளர்மதி, நான், என் மனைவி கல்பனா ஆகியோர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தோம் என்றால் சரிதான். என் தாயாரை சுவரில் மோதியதில்

தலையில் காயம் ஏற்பட்டதா என்றால் வெளிக்காயம் இல்லை. உள்காயம் ஏற்பட்டது. போலிசார் விசாரிக்கும் போது கலியன் என்பவர் என் தாயாரை கட்டையால் அவரது காலில் அடித்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அவ்வாறு கட்டையால் அடித்ததில் காயம் ஏற்பட்டதா என்றால் அதுவும் உள் காயம் தான். என்னை அய்யப்பன் என்னை கட்டையால் அடித்தால் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதா என்றால் இல்லை. வீக்கக்காயம் ஏற்பட்டது. அதற்கு சீர்காழி GH யில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் நானும் என் தாயார், என் மனைவி ஆகிய மூவரும் மேற்படி மருத்துவ மனையில் சிகிச்சையில் இருந்தோம்.

4. சம்பவம் நடந்த போது யார் யார் விலக்கிவிட்டதாக சொல்கிறேன் என்றால் சுமார் 4 அல்லது 5 தெருவாசிகள் விலக்கி விட்டார்கள். அவர்கள் பெயரை சொல்ல இயலாது. போலிசார் விசாரிக்கும் போதும் யார் யார் விலக்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடந்த 2021 ல் நான் அய்யப்பனை தாக்கியதாக 2021 ல் CC.254/2021 என்கிற எண்ணில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான். அதில் புகார் தாரர் அய்யப்பனின் மனைவி என்றால் சரிதான். அந்த வழக்கில் ரூ.500/– அபராதம் எனக்கு விதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி ஜட்டியயுடன் கொல்லை புறம் நின்றதாகவும், அதை என் அம்மா கேட்டதால் சண்டை ஏற்பட்டதாகவும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் அய்யப்பன் அவரது கொல்லை புறத்தில் குளித்துக்கொண்டிருக்கம்போது எங்கள் தரப்பினர்கள் தான் அவரை தாக்கி அவரது காலை முறித்துவிட்டோம் என்றாலும் அதனால் தான் கவுன்டர் வழக்கு நடந்து வருகிறதது என்றாலும் சரியல்ல.

5. அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நான் என் தயார் மற்றும் கல்பனா ஆகியோர் காவல் நிலையத்தில் புகார் அளிக்காமல் சீர்காழி GHயில் சென்று எந்தவித காயங்களும் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக ஏற்பாடு செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. உண்மையிலேயே அய்யப்பனும் அவரது தந்தையும் கட்டையால் தாக்கியிருந்தால் எங்கள் தரப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல. அய்யப்பன் குடும்பத்தார் மீது இருக்கும் முன்பகை காரணமாக அவர்களை நாங்களே தாக்கிவிட்டு, பொய்புகார் கொடுத்து, பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**